பிசுமில்லா யிர்ரகமா னிர்ரகீம்.

இத்தாபுகளிலிருந்து-முன்னோர் உரைசெய்த

# இபாயத்துல் யிசுலாம்.

இஃது.

பேட்டை - ஆமூர் - வாலை

பாவசாயபு-குமாரர்

அபுதுல்காதர்சாயபு அவர்களால்

பரிசோதித்தப்பிரதிக்கிணங்கக்

காயற்பட்டணம்,

மீருலெப்பை அவர்களால்

பார்வையிடப்பட்டுச்

சிந்தாதிரிப்பேட்டை

நாராயணசாமி முதலியா

ரவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

௲௮௭௪௵-ஜனவரி௴.

188
1-74

பிசுமில்லாயிர்ரகமா
நிர்ரகீம்.

# இபாயத்துல்யிசுலாம்.

அல்கம்துலில்லாஹி றப்பில்ஆலமீன் வல ஆகிபத்தொலில்
மூத்தகீன் அஸ்ஸலாதொவஸ்ஸலாமோ- அலாமுகம்மதின் - வஅ
லாஆலிஹி - வஅஸ்ஹாபிஹி - அஜமயீன்- ஆமீன்-ஆமீன்- அம்
மாபஅத்உ சொல்வான் இன்னம்- அறிதாலிபானவனே- அல்லா
குத்த ஆலாஉனக்குநல்லவழிதருவாகுகவும் - இந்தகித்தாபுடைய
பெயர்-இபாயத்துல்யிசுலாமாயிருக்கும் -இதை பிலத்த பிலத்த
க்கிதாபுகளிருந்து- மஸ்லாக்களையெடுத்து சஹிக்கண்டு யெழுதி
னதாகஇருக்கும்- இதுகளை இசுலாமானவர்கள் நினைவுவைக்கவே
ண்டியதாக யிருக்கும்- இதிலிருக்கிற மஸ்லாக்கள்யாதாமொருவ
னுக்கு தெரியாதேபோனால் - அவனுடைய இமாமத்துந்துருஸ்
தில்லை - அவன் ஆடுகோழிசுபாசெய்கிறதுந் துருஸ்தில்லை - அவ
னுடைய முரீதுதனமுந்துருஸ்தில்லை - அவனுடையசாக்ஷியுமஞ்
குரில்லை - இதினுடைய உக்கும் தெரியப்படுத்துவது என்னவெ
ன்றால் யாதாமொருவன்-நீ இசுலாமாவென்று கேட்டால் - அல்
ஹம்துலில்லாஹி என்றுசொல் - அதுக்கும் அனுஎன்னவென்றா
ல்- எல்லாபுகழ்ச்சியும் - அல்லாகுத்த ஆலாவுக்கேலாயக்காயிருக்
குமென்றுசொல்லு- நீயாருடையபந்தாவென்றுகேட்டால்-அல்
லாகுத்தஆலாவுடையபந்தாவென்றுசொல்லுநீயாருடைய உம்ப
த்தென்றுகேட்டால்-முகம்மதுமுஸ்தபா-ஸல்லல்லாஉ-அலைஇவ
ஸல்லமுடைய-உம்பத்தென்றுசொல்லு- நீயாருடையசுர்ரியதெ
ன்றுகேட்டால் - ஆதம்அலைஇஸ்ஸலாமுடைய சுர்ரியத்தென்று
சொல்லு நீயாருடையமில்லத்தென்றுகேட்டால் - இபுறாகீம்கலீ
லுல்லாவுடைய மில்லத்தென்றுசொல்லு - நீயாருடையதோஸ்த்
தென்று கேட்டால்நால்யாகர்களுடையதோஸ்த்துவென்றுசொ
ல்லு க-வது-அபுபக்கறகித்தீக்கு - தலியல்லாஉஅன்உ - ௨ - வது
உமறொயிபுனெகத்தாபு - றலியல்லாஉஊஅன்உ- ௩ - வது-உசுமா
னெ யிபுனெ அபுவான்றலியல்லாஉஊஅன்உஊ - ச - வதுஅலியிபு
னெ அபுத்தாலிபு றலியல்லாஉஊ அன்உஊ - யாதாமொருவன்- இ
ந்தநால்யார்களுடனே- முன்கிராகுல்காபறுயிப்போவான்- நவு

சுயில்லாஇ மின்ஹா- நீ- எத்தமசஅபுவென்றுகேட்டால்- அனபி மச அபுவென்றுசொல்லு நீ எந்தநாள் முதற்கொண்டு இசுலாமானெயென்றுகேட்டால்- மீஷாக்குநாள்முதற்கொண்டு - இசுலாமானேனென்றுசொல்லுசவால்மீஷாக்கு நாளாகப்பட்டதுஎன்ன-சவாபு - அல்லாகுத்தாலாதன் னுடையகுதரத்தினுலேஎல்லாஉயிர்களையும்படைத்து- அப்போதுஉங்களுடைய நாயன்நான்தானென்று சொன்னான்- அதுக்குஎல்லாஉயிர்களும் கபூல்செய்து- எங்களுடையநாயன் நீதானென்றுசொல்லியதுகள் - அந்தகவுல் பிரகாரத்துக்கு-தப்பாமல்நடந்தவர்கள்- யிசுலாமானுர்கள்- அது- மீஷாக்குநாளாயிருக்கும்சவால்-இசுலாமும்- குபிரும் - எப்படியாயிற்று- சவாபு- ஆதினுளையிலே-அல்லாகுத்தஆலா எல்லாவுயிர்களையும்படைத்து- புத்தியும்நினைவுங்கொடுத்து- ௪ -சுப்பாகநிறுத்தி தனக்கு-சுருது செய்யச்சொன்னான்- அப்போது ௧-வது ஸப்பும்-௨-வது ஸப்பும் - சுருதுச்செய்தது-௩-வது ஸப்பும்- ௪- வது- ஸப்பும்- சுருதுச்செய்யவில்லை பின்னையும்சுருது செய்யச்சொன்னான் அப்போது முதல் ஸப்பும்-௩ - வது- ஸப்பும் சுருதுசெய்தது- ௨- வது ஸப்பும்- ௪-வது ஸப்பும்- சுருது செய்யவில்லை - ஆகையால் - முதல்சப்பு-௨-திரமும்சுருதுச் செய்தபடியினுலே- இசுலாமானவர்கள்வயிற்றிற்பிறந்து-இசுலாமாவேயிருந்து மவுத்தாபுவார்கள்- ௩- வதுஸப்பு - முதல்சிசுதா செய்து-௨ - வதுஸிசுதாச்செய்தபடியினுலே - இசுலாமானவர்கள்வயிற்றிற்பிறந்து - காபிராகவேயிருந்து மவுத்தாவுவார்கள் -௩-வது-சப்புமுதல்சிசுதாச்- செய்யாமல்-௨- வதுசிசுதாச்செய்தபடியினுலே காபிரானவன் வயிற்றிற்பிறந்து இசுலாத்தில் வந்துமவுத்தாவுவான்-௪-வது-சப்பு இரண்டு திரமும் சிசுதாச் செய்யாதபடியினுலே - காபிரானவன் வயிற்றிற்பிறந்து - காபிராகவேஇருந்து மவுத்தாவுவான்-சவால்-இசுலாமானவர்களுக்கு- எத்தினிக்காரியம் பரலாயிருக்கும் - சவாபு ௱௩௰- காரியம்பரலாயிருக்கும் சவால் அது எது எது-சாவாபு-நபியுடைய தலைமுறையிலே பரலு (௪) மசஅபுலே பரலு (௪) ஒலுவிலே பரலு(௪)தை மத்திதில்பரலு (௩) குசலில் பரலு (௩) பினியல் இசுலாத்தில் பரலு (௫) தொழுகைநீயத்துபரலு(௫)தொழுகைவேளை அறிகிறதுபரலு (௫)தொழுகைக்குள்பரலு(௰௩) அஞ்சுவேளைதொழுகையில்பரலு ௰௭)றக்காயத்துபரலுரம்லான்மாத்தையில்பரலு(௯௰ சிபத்துயீமானில்பரலு(௭) ஆக பரலு(௱௩௰)சவால் - நபியுடைய-தலைமுறையிலே (௪) பரலாவது- எதுஎது- சவாபு(௧)வது- நபியுடையதகப்பனுர் - அபுதுல்லா(௨) வது- அவருடையதகப்பனுர்- அப்துல்முத்தலிபு(௩) வது - அவருடையதகப்பனுர்- அப்

தல்ஆஷிம்(௪) வது- அவருடையதகப்பனார்- அப்துல்முனபு-ச
வால்- மஜஹபுலே (௪) பரலாவது எது-எது-சவாபு (௧) வது- இ
மாமெஆசம் - றகமத்துல்லாகி அலைஇ (௨) வது இமாமெமாலிக்
இறஹமத்துல்லாகி அலைஇ(௩) வது- இமாமெஷாபி- றகமத்துல்
லாகி- அலை இ(௪)வதுஇமாமெஅம்ப்லிறகமத்துல்லாகி அலைஇச
வால் ஒசுவிலே(௪)பரலாவது-எதஎதுசவாபு.௧)வது- முகங்கழு
வுவது(௨)வது- இரண்டுகைமுழங்கை - வரைக்குங் கழுவுவது(௩)
வது நாவிலொருபங்கு தலையைமசாச்செய்கிறது(௪)வது - இர
ண்டுகால்களும் கணுக்கால்வரைக்குங் கழுவுவது- சவால் - தைம
த்தில்(௩) பரலாவது- எது-எதுசவாபு(௧ வது - தொழுகைக்காக
தையமம் பண்ணுகிறே னென்று நியத்துச்செய்வதும் ௨ வது-
மண்ணின்மேல் - ஒருதரம் அடித்து முகத்தைத்துடைப்பதும்-
௩ வது - பின்னையுமொருதரம் அடித்துஇரண்டு கைகள் மேலே
துடைப்பதும்- சவால்- குசுலிதே ௩ பரலாவது-எது-எது- சவா
பு ௧ வது - வாயிகொப்பளிப்பதும் ௨ வது - மூக்கில் தண்ணீர்
யேத்துவதும் ௩ வது- உடல்யாவத்தும்நனைய - தண்ணீர்வார்த்
துக் கொள்ளுவதும் - சவால் - பினுபிசுலாத்தில் ௫ பரலாவது-
எது-எது- சவாபு ௧ வது - கலிமாஓதுகிறது ௨ வது - தொழுகை
தொழுகிறது ௩ வது - நோன்பு-வைப்பது ௪ வது - சக்காத்துக்
கொடுப்பது ௫ வது - வல்லமையிருந்தால்மக்கத்துக்கு ஹச்சுக்
குபோகிறது- சவால்-தொழுகைநியத்து ௫ பரலாவது- எது - எ
து சவாபு ௧ வது - பஜரு தொழுகிறேனென்று நியத்துச்செய்வ
து ௨ வது - சுகர்தொழுகிறேனென்று நியத்துச்செய்வது ௩ வ
து- அஸர் தொழுகிறேனென்று நியத்துச்செய்வது- ௪ வது- ம
கரீபு தொழுகிறேனென்று நியத்துச்செய்வது ௫ வது - ஏஷா
தொழுகிறே னென்று நியத்துச் செய்வது ※ சவால் - தொழு
கைவேளை அறிகிறது(௫)பரலாவது-எது எது※சவாபு(௧)வது ப
ஜர்வேளை அறிகிறது(௨)வது- சுகர்வேளை அறிகிறது(௩)வது- அ
ஸர் வேளை அறிகிறது(௪)மகரீபு வேளை அறிகிறது(௫ வதுஏஷா
வேளை அறிகிறது-சவால் தொழுகைக்குள் (௰௩) பரலாவது- எ
து எது※சவாபு(௧)வது உடம்புதுப்புரவாயிருப்பது(௨)வது து
ணிதுப்புரவாயிருப்பது(௩) வதுதொழுமிடம் துப்புரவாயிருப்
பது(௪)வதுதொப்புளுக்குமேலிருந்து முழங்கால் கீழ்மட்டு ம
றைய உடைஉடுப்பது ௫)வது-தொழுகையுடையநியத்துமனதி
ல்செய்வது(௬)வது-தொழுகையுடையவேளை அறிகிறது(௭)வது-
கிபுலாவேதெரிந்துகிபுலாவுக்குநேராய்நிற்பது(௮)வது- அல்லா
குஅக்குபரென்று தக்கிபீர்சொல்வது (௯)வது- செவ்வையாகநி
ற்பது(௰)வது கிருயத்து ஓதுவது(௰௧)வது-ருக்கூபுச்செய்வது

(௰௨)வது- சிசுதாச்செய்வது(௰௩)வது-அந்தஅய்யாத்துடனேயிருப்பிலிருப்பது*சவால்- அஞ்சுவேளைத்தொழுகையில்(௰௭) பாலாவது-எது-எது- சவாபுபசர்வேளைத்தொழுகையில்(௨)ரெக்காயத்துபாலு-௨வது- சுகர்வேளைதொழுகையில்(௪)ரக்காயத்துபாலு(௩)வது-அசர்வேளைத்தொழுகையில்(௪)ரக்காயத்துபாலு(௪)வது- மகரீபுவேளைக்கி ௩ ரக்காயத்துபாலு ௫வது-எஷாவேளைக்கி ௪ ரக்காயத்துபாலு சவால்-றம்லான்மாத்தையில் ௩௰ பாலாவதுஎது- எது*சவாபு ௩௰ நோன்பு ௩ பாலு ௩௰ நீயத்து ௩௰ பாலு*சவால்சிபத்தீமானில் ௭ பாலாவது-எது-எது*சவாபு ௧ வது அல்லாகுத்தஹாலாமேலே ஈமான்கொள்ளுவது-௨ வது- அவனுடையமலக்குகள்பேரில் ஈமான்கொள்ளுவது- ௩ வது - அவனுடையகித்தாப்புகள் பேரில் ஈமான்கொள்ளுவது௪ வது - அவனுடைய றசூல்கள் பேரில் ஈமான்கொள்ளுவது ௫ வது-நாளைகியாமத்துபேரில் ஈமான்கொள்ளுவது ௬ வது- நேக்கியும் பதீயும்அல்லாகுத் தாலாது யென்று அல்லாகுத்தஹாலா உடைவராகி நேக்கியின் பேரிலும் பதீயின் பேரிலும் இல்லையென்றும் ஈமான் கொள்ளுவது ௭ வது - மவுத்தானபிறகு எழுந்திருக்கிறது அஃதென்றுஈமான்கொள்ளுவது* சவால்ஈமான் அசப்பட்டது* என்ன*சவாபுகலிமாவாகயிருக்கும் சவால்கலிமா அகப்பட்டது என்ன சவாபுலாயிலாஹாஇல்லல்லாஊ முகம்மதுர் ரசூலுல்லாகி*சவால்ஈமான் எப்படிக்கியிருக்கும்சவாபு அல்லாகுத்தஹாலாவுடையநூராயிருக்கும்* சவால்அதுஎவ்விடத்திலிருக்கும்* சவாபுஅச்சைக்கும்இச்சைக்கும் நடுவாகயிருக்கும்* சவால்-அதுஎப்படிஅறிகிறது*சவாபு-அது(௪)வகையைக்கொண்டுஅறிகிறது; * சவால்-அது-எது- எது-சவாபு(௧) வது- ஷிரிஹத்து(௨)வது- தரிகத்து(௩)வதுஅகீகத்து(௪)வது- மகரிபத்து*சவால் ஷிரிஹத்தாவதுஎன்ன * சவாபு- நம்பநபிசல்லல்லாகூஅலைகிவசல்லம்உம்மத்துகளுக்குசொன்ன பிரகாரம் நடக்கிறது ஷிரிஹத்தாகயிருக்கும்* சவால்தரீகத்தாகிறதுயென்ன * சவாபுநம்பநபிசல்லல்லாகுஅலைகிவசல்லம் இருந்தாற்போலிருக்கிறது தரீகத்தாகயிருக்கும்* சவால்அகீகத்தாகிறதுஎன்ன*சவாபுநம்ப நபிசல்லல்லாகுஅலைகிவசல்லம் அல்லாகுத்தஹாலாவேஅறிந்தாற்போலஅறிகிறது - அகீகத்தாகயிருக்கும் * சவால்மகரிபத்தாகிறதென்ன*சவாபுதன்னைபனுவாக்கி தன்னைப்படைத்த நாயனைக்காண்கிறதுமகரிபத்தாகயிருக்கும்,

## மஸ்லா.

பயம்பர் நடந்த நடத்தையைவிட்டுவிட்டு வேறே நடக்கையினாலே நம்மைப்படைத்த நாயனைக்காணக்கூடாது யாதா(

மொருவன் காணுவேனென்றால் அவன்காபறாயிருக்கும் நவுசுபி
ல்லாகி மின்கா* சவால் ஈமானுடைய பாசு எத்தினியிருக்குது*ச
வாபு(உ)இருக்குது*சவால்-அது-எது-எது*சவாபு(க)வது-அல்
லாகுத்த ஹலாவுடைய சாத்தைக்கொண்டும் சிபத்தைக் கொண்
டும் தனியாயிருக்கிறான் இன்னம் அவனுடையசாத்திலேவெறு
ருஷிக்கு நினைக்காமலும் பயகம்பர் சல்லல்லாகூ அலைகிவசல்ல
ம்அல்லாகுத்தஹாலாவுடைய ரசூலென்றும்கல்புனாலெமெய்யெ
ன்று எண்ணவேண்டும் (உ) வது-கல்புனாலே யெண்ணினாற்போ
ல வாயினாலே கலிமாஷி ஹாதத்துஓதவேண்டும்.

## மஸ்லா

லாயிலாஹா இல்லல்லாஊ முகம்மதுர்ரசூலில்லாகி எனப்ப
ட்டகலிமாவே எல்லவரும் என்னேரமும் நினைவுவைத்து கல்பா
ர- ஓதிக்கொண்டுவந்தால் மவுத்துடைய வேளையில்நினைவுவரும்
இந்தகலிமாவுடைய பருக்கத்தினாலே அல்லாகுத்தஆலா துனியா
விலும் ஆகிறத்திலேயும்- ஆபத்தான துயரத்தையும் சங்கடத்தை
யும்நீக்கிநல்லபதவியையும் இராகத்தையும்,ஈமானுங்கொடுத்துஜ
ன்னத்தின் நியாமத்துங்கொடுத்து தன்னுடைய தீதாரும்முகம்ம
து நபிசல்லல்லாகூஅலைகிவசல்லமுடையஷிபாஅத்துங்கொடுப்
பான்

## அதீஸ்

ஒருநாள் முசாபயம்பராகப்பட்டவர் அல்லாகுத்தஆலாயி
டத்தில் முனாஜாத்துக்கேட்டுக்கொண்டார்-யாஅல்லா- எனக்கொ
ருகலிமா கற்றுக்கொடுத்தாயானால் அதைக்கொண்டு நான் உன்
னை என்னேரமும் நினைத்துக்கொண்டே யிருப்பேனென்றார்,
அப்போது நாயனளவிலேயிருந்து - ஒருஉத்திரவுஉண்டாயிற்
று, அய்மூசலாயிலாஹா இல்லல்லாகூவென்று சொல்லென்றா
ன், அப்போது மூசாநபியாகப்பட்டவர் மறுபடியுங்கேட்டுக்
கொண்டார்-யாறப்பில்ஆலமீனே-இந்தகலிமாவை-துனியாவிலி
ருக்கப்பட்டவர்களெல்லாஞ் சொல்லுகிறார்கள் யாருக்குந்தெரி
யாதே யிருக்கிறதாயும் மறைபொருளாகவும் -வேறே இன்ன
மொருகலிமா கற்றுக்கொடுத்தால் அதைக்கொண்டு உன்னை - எ
ன்னேரமும் நினைத்துக்கொண்டு யிருப்பேனென்றார்- அப்போ
து- அல்லாகுத்தாலா. திருவுளமானான்-அயமூசா இந்தக்கலிமாவி
னுடையபருக்கத்தும், இதனுடையபுஜர்கியும் உமக்குத்தெரியா
தா அது எப்படியென்றால்ஏழுதட்டுபூமியும் ஏழுதட்டுவானமும்
இதுக்குள்ள இருக்கப்பட்ட வஸ்துவுக்கள் யாவற்றுஞ்சேர்த்து
என்னுடையசாற்றுஒன்றுதவிர மற்றவையெல்லா மொருதிராசு
தட்டிலேவைத்துஇந்தக்கலிமாவே ஒருதட்டிலேவைத்து இரண்

டையும்திறத்தால்அப்போது இந்தக்கலிமாதட்டுஆசப்பட்டதுப
ளுவாகயிருக்குமேயல்லாமல் சுளுவா இருக்கமாட்டாது என்றான்
அப்போது மூசாநபியானவர் கபூல்செய்து ஓதிக்கொண்டுவந்தார்

அதீஸ்.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார், அல்லாகுத்
தஆலாவே நினைக்கப்பட்ட சிக்றுகளில் லாயிலாஹா இல்லல்லா
கூ என்னப்பட்ட சிக்று மிகுதியானபுகழுகை பெற்றதாகயிருக்
கும்யாதாமொருவன் இந்தக்கலிமாவைஒருநாளைக்கி (௱)திரம்ஓ
திவந்தார்களேயானால் கபுருக்குழியிலே அவர்கள்முகம்பதினாலா
ம்பக்கத்து நிலவுபோலயிலங்கும் அவர்கள்ஜன்னத்துப்பதவிப்
பெற்றவர்களாக யிருக்கும் இன்னம் யாதாமொருவன் மவு
த்தாகிறபோது சக்ராத்துடைய வேளையிலே கிட்டயிருக்கப்ப
ட்டவர்கள் கலிமாவைகூப்பிட்டுச் சொல்லவேண்டியதாக யிரு
க்கும் அந்தக்கலிமாவை அவர்கள் காதுனாலேக்கேட்டு வாயினாலே
சொல்லாமற்போனாலும் மனதிலேயாவது நினைத்துக்கொள்ளு
வார்கள் அந்த வேளையிலே அவனுக்கு மெத்தசுகத்தாக இரு
க்கும் அந்தக் கலிமாவுடைய பரக்கத்தினாலே சொன்னவர்களுக்
கும் கேட்டவர்களுக்கும் அல்லாகுத்தஆலா ஆபத்தைநீக்கிஈமா
ன்கொடுத்து ஜன்னத்தில்தாக்கலாக்கிவிடுவான் ஆமீன் ஆமீன்யா
றப்பில்ஆலமீன் * சவால்கலிமாஎத்தனையிருக்குது * சவாபுகலி
மா (௫) இருக்குது * சவால்அது-எது-எது * சவாபு(௧) வது அவ்
வல்கல்மா(௨)வது-துய்யம்கல்மா(௩)வது- சிய்யம்கல்மா (௪) வ
து-சாரம்கல்மா (௫) வதுபஞ்சம்கல்மா-சவால்ஷிரீகத்துக்கல்மா
தரீகத்துக்கல்மா-அகிகத்துக்கல்மா மகரிபத்துக்கல்மாஎன்றுஇப்
படிக்கிவேறேவேறேகல்மா-இருக்குமா இல்லையா * சவாபு- இந்த
பேச்சுகள்பொய்யாயிருக்கும்இப்படிஎத்தினிகலிமாச்சொன்னா
லும்-அவ்வல்கல்மாவுக்கு உள்பட்டதென்றும்; அதனுடையஅனு
வென்றும் அறிந்துக்கொள்ளவும் * சவால் * இசுலாமானவர்களு
க்கு எத்தினிக்காரியம் வாஜிபாகயிருக்கும் * சவாபு-௭- காரியம்வா
ஜிபாயிருக்கும் * சவால்-அ-வது-எது-எது- * சவாபு௧ வது ஈதல்பி
த்தர்தொழுகிறது ௨ வது ஈதல்லொகாதொழுகிறது ௩ -வதுவித்
தர்தொழுகிறது ௪ வது தாய்தகப்பனுடையஅக்கு அதாச்செய்
கிறது ௫வது தங்கள்மக்கமனிதருடைய அக்குஅதாச்செய்கிறது
௬ வது புருஷனுடைய பணிவிடைபெண்சாதி செய்கிறது ௭
வது உவருச்செய்கிறது * சவால்இசுலாமானவர்களுக்கு எத்த
னைகாரியம்சுன்னத்தாகயிருக்கும் * சவால் அ காரியம்சுன்னத்தா
கயிருக்கும் * சவால் அதுஎதுஎது * சவாபு ௧ வது முகவேலை
ச்செய்துக்கொள்ளுவது ௨ வதுமீசையையொதுக்கி கத்திரிக்கி

றது ௩ வது மூக்குமயிர் வாங்குகிறது ௪ வது நகம்வாங்குகிறது ௫ வது மூக்குமயிர்வாங்குகிறது ௬ வது அக்கள்மயிர் வாங்குகிறது ௭ வது அரையிலிருக்கிறமயிர் வாங்குகிறது ௮ வது கத்தனுச்செய்கிறது* சவால் இசுலாத்துடைய உமக்கும் எத்தினியிருக்கிறது* சவாபு ௮ இருக்கிறது*. சவால் அது-எது-ன்து* சவாபு ௧ வது பாலை பரலென்றறிகிறது - ௨ வது வாஜிபைவாஜிபென்றறிகிறது ௩ வது சுன்னத்தைசுன்னத்தென்றறிகிறது ௪ வது முஸ்தகபை முஸ்தகபென்றறிகிறது ௫ வது அலாலேஅலாலென்றறிகிறது ௬ வது அறுமே - அறுமென்றறிகிறது ௭ வது மக்றூகை மக்றூகென்றறிகிறது ௮ வது முபாவேமுபாவென்றறிகிறது* சவால்பரசாகிறதென்ன* சவாபு கலிமாதொழுகைநோன்புஅச்சு சக்காத்து இந்தஐந்தும் இசுலாமானவர்களுக்கு பாலாயிருக்கும்* சவால்கலிமாவுடையஉக்கும் என்ன* சவாபுதானும்ஓதவேண்டும் யாராவதுஈமான்கொண்டுவந்தால் அவர்களையும் ஓதவைக்கவேண்டும் யாதாமொருவர் நம்பதினுக்குஉள்பட்டுநம்பகலிமாஒதி அல்லாகுத்தஆலாபேரிலும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம்பேரிலும் ஈமான்கொண்டுவந்தால் அவர்கள்பேரில்குற்றமில்லாமல் வீணையடிக்கலாகாது அவர்களைசதும் செய்துஅவர்களுடமையை வாயடித்துத்தின்னலாகாது அவர்களை வையலாகாது அவர்கள்பேரில் குமானிவைத்து அவர்களைகாபிரென்றுசொல்லலாகாது அவர்களுக்குஅன்னவஸ்திரங்கொடுத்து மிகுந்தபுசரிகையும் கொடுக்கவேண்டும்கலிமாவுடைய பரக்கத்தினாலே அவர்களுக்கு அல்லாகுத்த ஆலாகியாமத்துநாளையில்ஜன்னத்துப்பதவி கொடுப்பானென்று எண்ணவேண்டும்* சவால் தொழுகை தரித்திபுத்தெரிந்து அமல்செய்து வந்தார்களேயானால் அவர்கள் சவாபுபெறுவார்கள்அமல்செயயாமற்போனால்- அசாபுபெறுவார்கள் அதுக்குமுன்கிரானால் காபராய்ப்போவான் நவுதுபில்லாகி மின்ஹா.

அதீஸ்.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார் ஒருமதனினானவன் ஒருநாளைக்குஐந்துதிரம் குளிப்பானேயானால் அவனுடைய சரீரத்தில்அழுக்கானது கொஞ்சமாகிலுமிராது அப்படிப்போல ஒருநாளைக்கி அஞ்சுவேளையுந்தொழுதுக்கொண்டு வந்தார்களேயானால் அவர்கள்பேரில் பாவமானது கொஞ்சமாவதுயிருக்கமாட்டாது என்றார்

அதீஸ்.

முகம்மது நயிசல்லல்லாகு அலைகி அலைகிவசல்லம்திருவு

ளமானார் யாதாமொருவன் பசர்த்தொழுகையை விட்டுவிட்டா
னேயானால் அவன்ஈமானுக்கு தூரப்பட்டவனாக யிருக்குஞ்சுகர்
தொழுகையை விட்டுவிட்டானேயானால்அவன் நபிமார்களுக்கெ
ல்லாம் தூரப்பட்டவனாகயிருக்கும்எஷா தொழுகையைவிட்டுவி
ட்டானேயானால்அவன்மலக்குகளுக்கெல்லாம்தூரப்பட்டவனாக
யிருக்கும்மகரீபுத்தொழுகையைவிட்டுவிட்டானேயானால்அவன்
குரானுக்கு தூரப்பட்டவனாக இருக்கும்எஷாதொழுகையைவிட்
டுவிட்டானேயானால் அவன்அல்லாகுத்தஹாலாவுக்குதூரப்பட்
டவனாகயிருக்கும் தவுசுயில்லாகி மின்ஹா * சவால் நோன்பு
டைய உக்குமென்ன *சவால்- றம்சான்மாத்தையில் பாலீகான
ஆண் பெண் உடம்பு இருசுகத்தாயிருந்தால் முப்பது நோன்பு
வைக்கிறது பரசாயிருக்கும்.

அதீஸ்.

முப்பதுநோன்பில் முதல்நோன்புவைத்தமே யுண்டானால்
அவர்கள்செய்த பாவங்களெல்லாம் அல்லாகுத்த காலாபொறு
த்துக்கொண்டு நோன்பையுங் கபூல்செய்துக் கொள்ளுவான்
முப்பதுநோன்பு சரியாகவைத்தமே யுண்டானால் மறுவருஷம்
வருத்தனியும் அவர்கள்பேரில் ஒருகுற்றமுமலக்குகளெழுதமா
ட்டார்கள் இன்னம்யாதாமொருவர் முப்பதுநோன்பில்ஒரு
நோன்பையாவது விட்டுவிட்டார்களே யானால் அயாத்துள்ள
நாள்வரைக்கும் நோன்புவைத்தாலும் அந்தவிட்டுபோன ஒரு
நோன்புக்குஈடாகமாட்டாது

மஸ்லா.

உடம்புருசுகத்தில்லாதவர்கள் சுகத்தானபிறகு நோன்பை
கசாவைக்கவேண்டும்-இன்னம்பொழுதுவிடிய ௫ நாழிகையிரா
த்திரியிருக்கக்கே ஷகர்பண்ணவேண்டும் ஷகர்பண்ணச்சே மு
ழுக்குடைய ஆஜத்து மில்லாமிருக்கவேண்டும் பொழுதுமறையு
ந்தனியும் நோன்புஇருக்கவேண்டும் நோன்பிருக்கிறவர்கள்சோ
றுண்ணலாகாது தண்ணீர்குடிக்கலாகாது சஹாபத்துஞ்செய்யலா
காது ஒருசப்புமில்லாமல் யாதொன்றும் வாயில்போட்டுமெல்
லலாகாது மகரீபுதொழுகைக்கிமுன்னே நோன்புதிறக்க வேண்
டும்*சவால்-நோன்புஎன்னத்தினாலேதிறக்கிறது*சவாபு சுரூப
ழத்தாலாவது தண்ணீரினாலேயாவதுதிறந்தால் மெத்தநல்லது

மஸ்லா.

தலைச்செண்ணையிட்டுக்கொண்டாலும் தண்ணீர்வார்த்து
க்கொண்டாலும் தலைச்சவரம்பண்ணிக்கொண்டாலும் சுருமாயி

ட்டுக்கொண்டாலும் வாயிலேஈயாவது- தூசியாவதுபுகுந்துவயற்றுக்குள்போனாலும். நினைவில்லாமற்சோறுண்டாலும்தண்ணீர் குடித்தாலும், நோன்புபோகிறதில்லை சோறுண்ணும்போதும் தண்ணீர்குடிக்கும்போதும் - நினைவுவந்தால் விட்டுவிடவேண்டும்வாயிலிருப்பதை உடனே துப்பிவிடவேண்டும் இல்லாவிட்டால் நோன்புமுறிந்துபோகும் முறிந்தால்களாவைக்கவேண்டும் சவால்-நபில்நோன்பாவது-எது-எது*சவாபு- றச்சபுமாத்தையில் ஷபான்மாத்தையில் முகாரமாத்தையில் நோன்பு வைப்பதும் மாதமாதம்அய்யாமநோன்புபிறைப்பிறந்த ௰௩ நாள் ௰௪ நாள் ௰௫ நாள் நோன்புவைப்பதும் திங்கள்கிழமை வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை நோன்புவைப்பதும் இதுகளெல்லாம் நல்ல நோன்பாகயிருக்கும் இந்தநோன்பைவைக்கிறவர்களுக்கு அல்லாகுத்தாலாயிச்சமான சவாபைகொடுத்து ஆண்பிள்ளைகளை நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய மஜாலிசில் தாக்கலாக்கி விடுவான் பெண்பிள்ளைகளை பீவியுடையமஜாலிசில் தாக்கலாக்கி விடுவான் ஆமீனுமீன்யாரப்பில்ஆலாமீன் *சவால் - அச்சுடையஉக்குமென்ன *சவாபு- அச்சுக்குப்போகிறது அமீர்களுக்கும்தாகத்து உள்பட்டவர்களுக்கும் பரசாகஇருக்கும்இந்தஅச்சு அல்லாகுத்தாலா உக்குமானபடியினாலே இதைஅறிகிறது எல்லவருக்கும் பரசாயிருக்கும்*சவால் சக்காத்துடைய உக்குமென்ன *சவாவு பணமிருந்தால் சக்காத்துக்கொடுக்கிறது பரசாச்சுது.

## மஸ்லா.

யாதாமொருவருக்கு தன்னுடைய சமுசாரசிலவுக்கு ஒரு வருஷத்துக்கு மேற்படவெள்ளியாவதுபொன்னாவதுநகையாவது பணமாவதுஇருந்தால்தாற்பதுக்குஒன்றுவிழுக்காடுசக்காத்து கொடுத்தால்அந்தப்பணத்துக்கு அழிவில்லாமதும்குறைவில்லாமலும்காணாப்போகாமதும் இருக்கும் அது அலாலாகயிருக்கும் யாதாமொருவன்பணத்தைபுதைத்துவிட்டுசக்காத்துக் கொடாமற்போனால் அந்தப்பணம்அருமாச்சுது அவர்கள்மவுத்தானபிறகு அந்தப்பணத்தைநரகத்து நெருப்பிலேசிவக்கக்காச்சி அவர்களுடம்புயாவற்றுஞ்சூடுபோடுவார்கள்.

## அதீஸ்.

யாதாமொருவன் பணமிகுதியாவைத்திருந்து சக்காத்துக் கொடாமல் வைத்திருக்கிறவன் அல்லாகுத்தஆலாவுடையலஹனத்துபெற்றவனாக இருக்கும் லானத்துபெற்றவன் நகரவாதியாயிருக்கும்* சவால்-வாசிபாவதுஎன்ன-*சவாபு-ரெண்டுயீதுபெ

ருநாள் தொழுகையும் வித்ர்தொழுகையும் வாஜிபாக யிருக்கும்* சவால்- சுன்னத்தாவதுஎன்ன*சவாபுநபிசல்லல்லாகூ அலைஹிவசல்லம் ஒருகாரியத்தை அமேஷாவாச்செய்து ஒருதிரம் இரண்டுதிரம் விட்டுவிட்டு மிருந்தால் அதுசுன்னத்தாக யிருக்கும் சவால்- முஸ்தகபாவது- என்ன-சவாபு நபிஸல்லல்லாகுஅலைஹிவசல்லம் ஒரு காரியத்தை அமேஷாச்செய்யாமல் இரண்டுதிரம் மூன்றுதிரஞ்செய்து தன்னுடைய உம்மத்துகளை செய்யச்சொன்னகாரியம் முஸ்தகபாயிருக்கும் *சவால்- அலா லாகப்பட்டது. என்ன*சவாபுகுருனிலேசிறிதும்காரியஞ்செய்தால்நல்லதென்றுவந்ததுதிக்காச்செய்கிறதும் சுபாச்செய்கிறதும்இதுபோல அம்தபிரகாரத்துக்கு நம்பநபிசல்லல்லாகு - அலைஹிவசல்லம்தானும் செய்துநம்மையுஞ் செய்யச்சொன்னார் அப்படிப்பட்ட காரியம் அலாலாயிருக்கும்*சவால்-அருமாகப்பட்டது என்ன *சவாபுகுருனிலே சிலகாரியம் செய்யலாகாதென்றுவந்தது அதுஎதுவானால் சாராயங்குடிப்பது சினச்செய்வதுவட்டிவாங்குவது - கள்ளுக்குடிப்பது பொய்சொல்லுவது புறம்பேசுவது இப்படிபோல இன்னஞ்சிலகாரியம் தானுஞ்செய்யவில்லை நம்மையுஞ்செய்யவேண்டாமென்றார் அதுகாரியம்அருமா இருக்கும்*சவால்-மக்ரூராகப்பட்டது என்ன-சவாபு- யாதொருகாரியம் நம்பநபிதானுஞ் செய்யாமல் அதிஸிலியஞ்செய்யத்தேவயில்லை யென்று வந்தது அதுமக்கூரா இருக்கும்*சவால்- முபாவாகப்பட்டது என்ன* சவாபுயாதொருகாரியம் செய்யச்சொல்லி யுத்திரவில்லாமலுஞ் செய்யவேட்டாமென்று உத்திரவில்லாமலும் இருப்பதுமுபாவாக யிருக்கும்.

## அதீஸ்.

முகம்மதுநபிசல்லல்லாகூஅலைஹிவசல்லம் திருவுளமானதென்னவென்றால்என்னுடையஉம்மத்துக்களே நீங்களித்தத்துனியாவிலேவந்ததுக்கு அல்லாகுத்த ஆலாவுக்கு இரம்பவும் பயப்படுங்கள் உங்களுக்குத் தேவையானதே அல்லாகுத்த ஆலாயிடத்திற் கேட்டுக்கொள்ளுங்கள் இன்னம் அவன்பேரில் இருதாவையுங்கள்இன்னம் அல்லாகுத்தாலா எப்படிக் கொத்தவனென்றால் ஒருமனிதனுடைய அக்குலே(எய)தாயாருடையபிரியத்திலுமதி[illegible]பிரியமுள்ளவனாயிருக்கும்இன்னம் மனிதர்களுடையசாகிபா[illegible] எல்லாவற்றையுமறியப்பட்டவனா யிருக்கும் எல்லாக்காரியத்து[illegible] இராதா வைக்கிறவனாயிருக்கும் அவன் இராதாயில்லாமற்படிக்குயாதொருகாரியமுமாகிறதில்லை இன்னத்துனியாவில் நல்வழிக்காரருக்குஜன்னத்தின் நியாமத்துங்கொடுத்துஅவர்களை

ஜன்னத்தில் தாகல்செய்கிறவனாயிருக்கும்ஆகையால்துனியாவில் நல்லநடத்தையையறிந்து துப்பாவாகயிருந்து நன்மையானகாரியங்கள்செய்து ஈடேற்றமாகவேணுமென்றருளினார்*சவால்-துப்பாவுஎத்தினிவிதமாயிருக்கும் - சவாபு(௨)விதமாயிருக்கும்*சவால்-அது-எது-எது*சவாபு(௧)வது-ஒசுச்செய்வது(௨)வது - குசல்செய்வது*சவால்யாதாமொருவன் ஒசுவில்லாமல்தொழுதுக்கொண்டால் அந்தத்தொழுகைதுருஸ்தா இல்லையா*சவாபு - அந்தத்தொழுகை அருமாச்சுது அவன் அந்தத்தொழுகையை அலாலென்றுயெண்ணினால் அவன்கபறாய் போவான்*சவால் - யாதாமொருவன் ஒசுவிருக்கஒசுச்செய்தால் உக்குமென்ன*சவாபு-முஸ்தர்பாயிருக்கும்ஒளிவுமேலொளிவு யிலக்குமதுபோலிருக்கும்

## மஸ்லா.

யாதாமொரு தொழுகாளி தொழுகைக்காக ஒசுச்செய்வானேயானால் அவனுடைய பாவங்களெல்லாம் அவனைவிட்டு யெப்படி விலகிப்போமென்றால் பெருங்காற்றடித்தால்மாத்திலொரு இலையுமிருக்காமல்உதிர்ந்துபோவதுபோல் அவனுடையபாவங்களெல்லாம் அவனைவிட்டு விலகிப்போகும் *சவால் - ஒசுஎத்தினிவகையாயிருக்குது*சவாபு (௪) வகையாயிருக்குது*சவால்-அது-எது- எது*சவாபு(௧)வது - பரசுஒசுவு(௨)வது- வாஜிபுஒசுவு(௩)வது - சுன்னதுஒசுவு(௪)வதுமுஸ்தகபுஒசுவு*சவால் - எந்தக்காரியத்துக்குஒலுச்செய்கிறது-பாசாயிருக்கும்*சவாபு- தொழுகைக்காகஒசுச்செய்வது பாசாயிருக்கும்*சவால்எந்தக்காரியத்துக்கு ஒலுச்செய்கிறது வாஜிபாகயிருக்கும்* சவாபு- காபத்துலாவை தவ்வாபுச்செய்யவும் குறானையாற்றொடவும் ஒலுச்செய்வது வாஜிபாகயிருக்கும்* சவால்எந்தக்காரியத்துக்கு ஒலுச்செய்கிறது சுன்னத்தாகயிருக்கும் * சவாபு - குறானை ஓதவும் பித்தாகித்தாபை கையிற்றொடவும் ஒலுச்செய்வது சுன்னத்தாகயிருக்கும்* சவால் - எந்தக்காரியத்துக்கு ஒலுச்செய்வது முஸ்தகபாகயிருக்கும்* சவால்- அன்னமுண்ணவும், படுத்துக்கொள்ளவும், சுஹபத்துச்செய்யவும், ஒலுச்செய்வது முஸ்தகபாகயிருக்கும் * சவால் - குசல்யெத்தினி வகையாயிருக்குது*சவாபு- (௪) வகையாயிருக்குது * சவால்- அது- எது- எது* சவாபு (௧) வது பரசுகுசல்- (௨)வது வாஜிபகுசல் (௩)வது - சுன்னத்துகுசல்(௪)வது முஸ்தகபுகுசல் * சவால்ஆண்பிள்ளைகள்பேரில் யெத்தினிசப்புறாலேகுசல்பரலா யிருக்குது-சவாபு(௩)சப்புறாலேகுசல்பாசாயிருக்குது*சவால்-அது-எது- எதுசவாபு(௧)வது-தூக்கத்தில்னக்கண்டு அருக்கத்தாகிறதுனாலே

யும்(௨)வது- பெண்சாதியுடன்கூடுகிறதினாலேயும் (௫) வது-விந்துஉதித்துவெளியேகாண்கிறதினாலேயும் இந்த(௫)சப்புனாலேகுசல்பரசாயிருக்கும் ※ சவால்பெண்சாதிகளுக்கு எத்தினிசப்புனாலேகுசல்பரசாயிருக்கும்※சவாபு-௬ சப்புனாலேகுசல்பரசாயிருக்கும்※சவால்அது.எதுஎது.சவாவு ஆண்பிள்ளைகளுக்குமேற்சொல்லியகுசல்(௫)ம்சவது-அயசாகிறதும்-௬-வது நிபாசும்ஆகயிந்த அஞ்சுசப்புனாலே குசலபரசாயிருக்குது※சவால்-அய்சென்னப்பட்டது என்ன※சவாபு- பெண்பிள்ளைகளுக்கு மாதமாதம் ஒருதிரமுதிரம் வெளிப்படும் அதே அய்சென்று சொல்லுவார்கள்※சவால் அதுக்கு எத்தினிநாள் முக்குறாகவிருக்கும் - சவாபு-மூன்றுநாளையிலிருந்து பத்துநாள்மட்டுக்குமிருக்கும்※சவால்(௫)நாளைக்குங்குறைச்சலாய் (௰) நாளைக்குமேற்பட்டதானால்உக்குமென்ன※சவாப-அதுகுசும்பனேகமென்று சொல்லப்படும் ※ சவால் அப்படிபோற்கெசத்த பெண்பிள்ளைகள் எப்படி தொழுதுக்கொள்ளுகிறது ※ சவாபு-வேளைக்குவேளை - ஒளுச்செய்துக்கொள்ளவேண்டும்※சவால்-அய்சாயிருக்கப்பட்ட பெண்பிள்ளைகளுக்குஉக்குமென்ன※சவாபுதொழுதுக் கொள்ளலாகாது நோன்புவைக்கலாகாதுபுருஷனுடன் சேரலாகாதுகாபத்துல்லாவைதவ்வவாபுசெய்யலாகாது பாத்திஆஓதலாகாது குறுனேதலாகாது குறுனைக்கையிற்றொடலாகாதும்சாறுண்ணும்போதுபிசுமில்லாயிறைந்துச்சொல்லலாகாது தும்மனுக்குயிரதியிறைந்துச்சொல்லலாகாதுதொழுகையவர்களுக்கு மரபாயிருக்கு நோன்புங்கசாவைக்கவேண்டியது※ சவால்- நிபாசென்னப்பட்டதென்ன ※சவாபு - தவனுதானபின்பு உதிரம்புறப்படும் அதைநிபாசென்று சொல்லுவது※ சவால்- அதுஎத்தினிநாள்முக்குறாயிருக்கும்※சவாபு(௪௰)நாள்முக்குறாயிருக்கும்※சவால் நிபாசுடையஉக்குமென்ன※ சவாபு- அய்சுடையஉக்குமும் நிபாசுடையஉக்குமும் சுனுபத்துடைய உக்குமும் ஒன்றாகவேயிருக்கும்இன்னம்சுனுபத்துக்காரர்கள் சுகபத்துச்செய்கிறதுமுபாவாயிருக்கும்இவர்களுக்குநாள்மூக்குறா யில்லாதபடியினாலே சல்தியாகுசல்செய்யவேண்டும் குசல்செய்யாமற்சோறுண்டது அருமாயிருக்கும்-சவால் சுனுபத்துக்காரென்று யாரைச்சொல்கிறது ※ சவாபுபுருஷனும் பெண்சாதியுங்கூடிசுகபத்துச்செய்தால்அதைச்சொல்வது※சவால்-அய்சாயிருக்கப்பட்டநாளையில் சுகபத்துச்செய்துஅமல்தரிச்சுபிள்ளைப்பிறந்தால்அது அருமாச்சுதாயில்லையா※ சவாபுஅது நிசமானஅருத்துலே பிறந்தபிள்ளையாயிருக்கும்.

மஸ்லா.

சுனுபத்துக்காரர்கள் குசல் செய்யாதிருக்கிற வீட்டில் பாத்

இரா யோது அல்லாகுத்தஆலாவுடைய றகமத்துயிரங்காதுமவுத்தானவர்களுடையறூகானியும்வராது அவர்கள்வீட்டைவிட்டு வெளியேபுறப்பட்டால் அவர்கள் மேலே அல்லாகுத்த ஆலாவுடையலானத்துயிரங்கும் இபுலீ சர்கப்பட்டவன் என்னேரமும் அவர்களை கலைத்துக்கொண்டேயிருப்பான் ஆகையால் சலதிருசல்செய்யவேண்டும் * சவால் எத்தினிசப்புளுலே குசல்வாசிபாகுது * சவாபு(௨) சப்பிளுலே வாசிபாகுது * சவால் அதுஎதுஎது சவாபு(௧)வது மையத்துக்குசல்கொடுக்கிறது ௨ வதுபாலிகாளுகாபுருனவன் இசுலாத்திலேவந்தால் அவனுக்குகுசல் கொடுக்கிறது- சவால்எத்தினிசப்புளுமேலேகுசல்சுன்னத்தாகிறது*சவாபு(௪) சப்புளுமேலேகுசல் சுன்னத்தாகிறது * சவால்- அது எதுஎது * சவாபு(௧) வது வெள்ளிக்கிழமைக்கு குசல்செய்கிறது சுன்னத்து ௨. வது இரண்டுயீதுக்கும் குசல்செய்கிறது சுன்னத்து ௩ வதுமக்கத்துக்குப்போகச்சேகுசல்செய்கிறது சுன்னத்து ௪ வது மக்கத்திலிருந்து அரபாத்துமலைக்கிப்போகச்சே குசல்செய்கிறதுசுன்னத்து* சவால்- எத்தினிசப்புளுமேலே குசல்முஸ்தகபாகிறது*சவாபு- ௧ யிருக்குது* சவால்அது-எது எது* சவாபுபாலகாத ஆண்பிள்ளையாதாமொருவன் நாற்கால் சீவத்துடன் சுகபத்துச்செய்தால் அவனுக்கு குசலகொடுக்கிறது முஸ்தகபாயிருக்கும்.

## அதீஸ்.

நபிசல்லல்லா- அலைகிவசல்லந் திருவுளமானார் நிக்காச்செய்கிறது அலாலாயிருக்கும் அப்படி நிக்காச்செய்து அவுலாது பிறந்தால் அவர்களென்னுடைய பயிர்வியை சாரிச்செய்தவர்களாகயிருக்கும் என்னுடைய பயிரிவியை சாரிபண்ணினவர்கள் என்னுடைய உம்மத்தாயிருக்கும் யாதாமொருவன் ஆண்பிள்ளைத்தனமிருந்து கலியாணந்தேவயில்லை யென்றால் உன்னுடைய ஷிபாஅத்துக்குதூரப்பட்டவனாகயிருக்கும்ஏனென்றால் எனக்கு முன்னாலேஇருந்த நபிமார்களெல்லாம் நிககாச்செய்து அவுலாதுபெற்றிருக்கிறார்கள். நானும்நிககாச்செய்து அவுலாது பெற்றிருக்கிறேன் நிககாச்செய்கிறதினாலே புருக்கத்துண்டாகும் அவலாது பிறந்தால் அல்லாகுத்தஆலாயிடத்திலிருந்து றகமத்துஇறங்கும் ஆகையால் கலியாணந்தேவையில்லை யென்றவர்கள்என்னுட உக்குமுந் தள்ளிவிட்டு அல்லாகுத்த ஆலாவுடையறகமத்தை வேண்டாதவர்களாக யிருக்கும் என்னுடைய உகுமைத் தள்ளிவிட்டபேர்கள் குனககாரர்களாயிருக்கும்*சவால் -நிககாச்செய்யஎத்தினிமுறை அருமாயிருக்கும்*சாபு (௰௪) முறையுள்ளபேர்

கள்-அருமாயிருக்கும்*சவால்-அதுயாரியார்*சவாபு(௧)வதுதன்னுடையதாய் (௨)வது மறுதிரம்வந்ததாய் ௩ வது அக்காள்தங்கச்சி ௪ வது மகள் ௫ வது தகப்ப னுடைய அக்காள் தங்கச்சி (௬) வது தாயி னுடைய அக்காள் தங்கச்சி ௭ வது அண்ணன் தம்பிமகள் (௮) வதுஅக்காள் தங்கச்சி மகள்(௯) வதுபால்கொடுத்தவள்வளர்த்தவள் (௰) வது பால்கொடுத்தவனுடைய மகள் (௰௧)வதுமாமியாள்(௰௨)வதுதனக்கு மறுதிரம்வந்தவள்வாச்சேகொண்டுவந்தமகள் (௰௩)வது மருமகள்-௰௪ வது தன்னுடைய பெண்சாதியிருக்க அவளுடைய தங்கச்சி அருமாயிருக்கும் பெண்சாதிமவுத்தானபிறகு அலாலாகயிருக்கும்*சவால்குலாமாகப்பட்டவன்தன்னுடைய பீவியைநிக்காச்செய்யலாமாயில்லையா*சவாவு-அது அருமாயிருக்கும்*சவால்-மகர்யெத்தினிரூபாவைக்கவேண்டும்அவரவர்கள் ஆஸ்திக்குத்தகுந்தாற்போலபார்த்துமகர்வைக்கவேண்டும்*சவால் ௨ ரூபாயிக்குகுறைச்சலா மகர்வைக்ககலாமாயில்லையா*சவாபு-மகர்வைக்கலாகாது ௨௦ ரூபாயிக்கு மேற்படஎம்மாத்திரமானாலும்வைக்கலாம்-சவால் நிகாச்செய்கிறவேளையில் மகர்மூக்ரூர்ச்செய்து இரம்பம்கர்பணம்வைத்துக்கட்டினால் அந்தமாப்பிள்ளையானவன் கொடுக்கத்தாகத்துயில்லாமல் இம்மாத்திரம் பணங்கொடுக்க என்னாலேமாளாதுயென்கிறநீயத்து மனதில்வைத்தால்அவனுடையநிககா அருமாச்சுதாயில்லையா*சவாபு - அந்தநிககா அருமாச்சுது*சாவல்பெண்சாதிக்கிமகர்கொடுக்கிறது அன்னவஸ்திரங்கொடுக்கிறது வாஜிபா அல்லதுசுன்னத்தா * சவாபுமகர்கொடுக்கிறதுபரலா:யிருக்கும்,அன்னவஸ்திரங்கொக்கிறது வாஜிபாயிருக்கும்.

## மஸ்லா.

தன்னுடையபெண்சாதியை புருஷனாகப்பட்டவன் அவளுடையமனதைநோகச்செய்யலாகாதுயிச்சமாக அய்பானச்சொல்லுகள் அவளைச்சொல்லலாகாது அவளைவீணாகவையலாகாதுதன்னுடையதாகத்துகெகுத் தகுந்தாற்போல அன்னவஸ்திரங்கொடுத்து வீட்டில்வெட்கத்துடனே வெளியபுறப்படவொட்டாமல்வைக்கவேணும் இன்னம்நல்லநடக்கைத் தானும்நடந்து தன்னுடையபெண்சாதிக்குகற்றுக்கொடுத்து அவளையும்நல்லநடக்கைநடப்பிக்கவேண்டும் அப்படிக்கற்றுக் கொடுக்காமற்போனால்குணக்காரனாய்ப்போவான்*சவால்- ஒருபெண்பிள்ளையயிட்டெத்தினிபேர் நரகத்திற்போவார்கள்*வாபு- ௪ -பேர்போவார்கள்*சவால் அதுயாரியார்*சவாபு- ௧ -வது தன்னைப்பெற்றதகப்பன்-௨ வது தன்னுடன்பிறந்தஅண்ணன்அல்லதுதம்பி௩-வது

தன்புருஷன் - ச -வதுநன்வயிற்றிற்பிறந்தபிள்ளை*சவால்இவர்க ளென்னத்தினாலே நரகத்திற்போவார்கள்*சவால்-துனியாவில் ஒருபெண்பிள்ளைக்கி இந்தநான்குபேரும் வாரீஸ்காரர்களாகயிருக்கும் ஆகையால் இந்த நான்குபேரில் யாராவது அந்தப் பெண்பிள்ளைக்கி நல்லநடக்கைக் கற்றுக்கொடுக்கவேண்டியது அவர்கள்பேரில் பாலாயிருக்கும் இவர்கள் கற்றுக்கொடுக்காமற்போனால் கியாமத்துநாளையில் அல்லாகுத்தஆலாகேழ்விக் கேட்கும்போது அப்போது அந்தப் பெண்பிள்ளையானவள் இசுலாத்துடைய நடக்கைதெரியாமல் பொல்லாதநடக்கை நடந்திருந்தால்அப்போது கேட்ப்பான் அல்லாகுத்தஆலா- ஓ-பெண்பிள்ளையே- என்னத்தினாலே நல்லநடக்கையை நீ விட்டுவிட்டு-நீ-பொல்லா நடக்கையைநடந்து வந்தாயென்றுகேட்டு அசாபுக்கொடுக்கும்போது அந்தப் பெண்பிள்ளையானவள் சொல்லுவாள் யாஅல்லாகுத்தஆலாவே யென்பேரில்யாதொரு குற்றமுமில்லை துனியாவில் என்னுடைய ச வாரிசுக்காரர்க ளிருந்தார்கள்அவர்களிலொருவராகிலும் எனக்குநல்லநடக்கையிது பொல்லாதநடக்கையிதுவென்று அவர்களுக்கு இசுலாத்தின் நடக்கை தெரிந்திருந்தும் எனக்குக்கற்றுக்கொடுக்காமல் - கள்ளு-சாராயம்- பொய் சூது - களவு புறம்பேசுதல் - இவைபோல கெட்ட அருமான நடத்தைகள் நடந்துவந்தார்களேயொழிய அவர்களிலொருவருமெனக்கு புத்திசொன்னதில்லை நானு முனக்கு பயந்து அவர்களுத்திரவில்லாமல் வீட்டைவிட்டு வெளியே புறப்படாமல் அவர்கள் சொன்ன பிரகாரங் கேட்டு நடந்துக் கொண் டிருந்தேன் ஆகையால் அவர்கள்பேரில் குற்றமே யல்லாமல் என்பேரில் ஒரு குற்றமில்லை யென்று சொல்லுவார்கள் ஆகையால் துனியாவிலேயும் ஆகிரத்திலேயும் பெண்பிள்ளைகளை யிட்டு இந்த நாலுபேருக்கும் வருத்தமேயொழிய இருக்கத்தில்லை அதுக்காகவேண்டி இன்னால்வரில் யாராவது - நல்ல நடக்கை கற்றுக்கொடுக்கவேண்டியதாகயிருக்கும்*சவால் - இந்தநாலுபேரில் யாராவது நல்லநடக்கையைக் கற்றுக்கொடுத்தால் அந்தப்பெண் பிள்ளையானவள் நான்கற்றுக்கொள்ளமாட்டேனென்னால் உக்குமென்ன * சவாபு- கற்றுக்கொடுக்கிறே னென்றவர்கள் சொர்க்கம் பெறுவார்கள் நான்கற்றுக் கொள்ளமாட்டேனென்ற பெண்பிள்ளைகளானவர்கள் நரகம்பெறுவார்கள் சவால்- எத்தினிசப்புநாலே பெண்பிள்ளைகள் நரகம்போவார்கள் * சவாபு-ச-சப்புனாலே நரகத்திற்போவார்கள் * சவால் - அது- எதுஎது * சவாபு ௪ வது - அல்

லா றசூலுடைய சொல்லும் புருஷனுடைய சொல்லையுந் தட்டிவிட்ட பேர்கள் ௨ வது - எளியத்தனமா யிருக்கப்பட்ட புருஷனை பிலமாகவுடமையும் நல்லவஸ்திரமும் நல்ல உண்பனையும் கேட்டு புருஷனுடன் எந்நேரமுஞ் சண்டை செய்து அவனுடையமனதைநோகச் செய்தபேர்கள் ௩ - வது- அசல்புருஷனுடனே அருமான நடக்கைநடக்கப்பட்டவள் ௪ வது - புருஷனை மதியாமல் தன்னுடைய ஆணுவத்தினாலே புருஷனை வைகிறதும் அவன் உத்திரவில்லாமல் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டுப் போகப்பட்டவர்கள்* சவால்பெண்சாதியானவள்புருஷனுடையபணிவிடைகள் எப்படிசெய்யவேணும் * சவாபு - தன்னுடையபுருஷன் மனதை நோகச் செய்யாமல் அவன் உத்திரவின்படியாவும் நல்ல நடக்கையாவும் நடந்துக் கொண்டால் துனியாவிலும் ஆகிறத்திலேயும் நற்பதவி பெற்றவர்களாயிருக்கும்.

மஸ்லா.

பெண்சாதியாகப்பட்டவள் தன்னுடையபுருஷனுக்கு மனதில்துயரத்தைக்கொடாமலும்,புருஷன்மனதைநோகச்செய்யாமலும்,அவனைவையாமலும்- அவன்பேரில்புரணிப்பேசாமலும், அல்லா றசூலுக்குப் பயந்து புருஷனுடைய பணிவிடை செய்யவேண்டும், என்னேரமும் புருஷனுடையபயம் மனதில் வைக்கவேண்டும் அவனுடைய மனதைமிகவுஞ்சந்தோஷிப்படுத்தவேண்டும் அவன் சொல்லைத் தட்டலாகாது அவனுடைய உடமையை அவனுத்திரவில்லாமல் யாருக்குங்கொடுக்கலாகாது அவனுடையகாலின்கீழே பெண்சாதிகளுக்கு சுவர்க்கமாகவிருக்கும்ஆகையால் புருஷமாருக்குப் பெண்சாதி வேற்றுமை செய்யலாகாது துனியாவி லிருக்குந்தனியும் ஈமானுக்கு நேரானடந்து பீவிமாருடைய மஜாலிசிலேதா கலாக வேணுமே யல்லாமல் ஈமான்மாறியிருக்கலாகாது * சவால் எத்தினிசப்புனாலே ஈமான்சலாமத்தாகயிருக்கும்* சவாபு உ) சப்புனாலே சலாமத்தா யிருக்கும்* சவால்- அது-எது-எது * சவாபு (க) வது என்னேரமும் அல்லாஹுத்தஆலாவுடைய சக்கூருச் செய்வதினாலேயும் (உ)வது-அவன்விட்டத்தங்கடத்துக்குபசர் செய்வதுனாலேயும்* சவால்-எத்தினிசப்புனாலே இமான்மாறிப்போகும்*சவாபு(௩) சப்புனாலே ஈமான்மாறிப்போகும்சவால்அது-எது-எது*சவாபு(க)வது- ஷிருக்கான இராதாவைப்பதினாலேயும்(உ)வது-வாயால்சொல்லுவதினாலேயும்-௩வது ஷிருக்குக்காரியஞ் செய்வதினாலேயும்* சவால் எப்படி-இராதாவைத்தால் ஈமான்மாறிப்போகும்*சவாபு - குபி

ஞானகாரியத்தின் பேரிலும் குரிச்சொல்லுவதின் பேரிலும் குபிருனசாஸ்திரத்தின் பேரிலும் நோவுதீர்ப்பார்களென்றும் அவுலாது கொடுப்பார்களென்றும், கண்ணுக்கொடுப்பார்களென்றும இப்படிப்பட்ட ஷிருக்கானஇராதாவைப்பதினாலே ஈமான்மாறிப்போகும் * சவால் - எப்படிப்பட்ட சொல்லுகள் சொல்வதினாலே ஈமான்மாறிப்போகும் * சவாபு - அல்லாகுத்தாலாவையும் நபிமாரையும் மலக்குகளையும் வைவதினாலும் குருனில்வருகிறசொல்லுகளையும் அதிசில்வருகிறசொல்லுகளையும் தொழுகையும்பழிப்பதினாலும் குபிருனகாரியம்நல்லதென் சுலாமானகாரியம் கெட்டதென்றும் நரகம்சுவர்க்கமில்லை யென்றும் முனகிர்நக்கிர் சவாலில்லையென்றும் கியாமத்து நாளையில் அல்லாகுபகாஹுத்தாலா உடையதிதாரும் நபியுடையஷபா அத்து மில்லையென்றும் - மவுத்தானப்பிறகு எழுந்திருக்கிறது பொய்யென்றும் பாவஞ்செய்த அடியார்களுக்கு அசாபுயில்லை யென்றும்நோக்கிச்செய்தவர்களுக்கு* 'வாபு - யில்லையென்றும் இப்படிப்பட்டசொல்லுகள் சொல்லுகிறதினாலே ஈமான்மாறிப்போகும் * சவால் எப்படிப்பட்ட காரியம்செய்கிறதினாலே ஈமான்மாறிப்போகும் * ச்வாபு இசுலாமானக்காரியத்தைவிட்டுவிட்டுபுத்துகளுக்கு பூசைசெய்தாலும் அந்தப்புத்துகளிடத்தில்பாத்திஹாவோதினாலும் அங்கைஜண்டா யேற்றினாலும் அதின்காலில் விழுந்தாலும்மவுத்தானவர்கள்பேரால்கள் ஞுசாராயம்கஞ்சாபுகையிலை இதுகளை வைத்து பாத்திஹா ஓதினாலும் பிள்ளைகள் தலையிலேகுடுமிவைத்தாலும்பிள்ளைகளுக்குஞுருவுப்புறப்பட்டால்அதுக்குதெள்ளுமாவு செய்துகொடுத்தாலும்கூழுவார்த்தாலும் பஞ்சாறுத்தினாலும் அதின்காலில்விழுந்தாலும் இப்படிப்பட்டஷிருக்கானகாரியம்செய்தால்ஈமான்மாறிப்போகும்சவால் - முகர்றமாத்தையிலென்னகாரியஞ்செய்யவேண்டும் * ச்வாபு- முஹர்றமாத்தையில் குர்ஆன்வோத வேண்டும். தொழுகை தொழவேண்டும் நோன்புயிருக்கவேண்டும் அல்லாகுத்த ஆலாமிச்சமாகொடுத்திருந்தால்நல்லஅசனஞ்செய்துயெளியோர்களுக்கு கொடுக்கவேண்டும்கயிர்கயிருத்துசெய்யவேண்டும் ஷிகிதானவர்கள்பேரால் பாத்திஹாஓதவேண்டும் இப்படிபட்டநல்லகாரியங்கள்செய்தால்அல்லாகுத்தஆலாஒன்றுக்குபத்துநன்மைதருவான் இதைவிட்டுவிட்டுஅத்தநாளையிலே வேணாஷிருக்கானக்காரியஞ்செய்தால் கியாமத்துநாளையிலும்கபுருக்குள்ளவும் மெத்தசகதான அசாபுல்உள்பட்டவர்களாக யிருக்கும் * சவால் - கபுருக்குள்ளாளத்தினிசப்புனாலே அஜாபாயிருக்கும் * சவாபு (௪) சப்புனாலேஅசாபா

கயிருக்கும்* சவால்- அது எது எது* சவாபு (௧) வது இசுலாமான
காரியங்களை விட்டுவிட்டு மனதில் ஷிருக்குவைப்பதினாலும் பொ
ய்மிகுதிசாகச்சொல்வதினாலும் ௨) வது - அசலாருடமையைதிரு
டினாலும் அருமானகாரியம் செய்வதினாலேயும் (௩) வது சாடி
ச்சொல்வதினாலும் ஒருவருடைய புராணிபேசுவதினாலும் (௪) வது
குசல்செய்யாமல் மூழுக்குடனே இருப்பதினாலும் இந்த நாலுச
ப்புனாலே புருக்குள்ள மெத்தசகுதான அசாபாயிருக்கும் * சவா
ல் எத்தினிசப்புனாலே புருக்குள்ள இராகத்தாக இருக்கும்* சவா
பு-௪- சப்புனாலே இராகத்தாகயிருக்கும் * சவால்- அது-எது-எது*
சவாபு- ௧ -வது ஐந்து வேளையுந்தொழுவதினாலும் (௨) வது-சயிர்க
யிருத்துச்செய்வதினாலும் (௩)- வது குருனை ஓதி அதிலுள்ளபடி
நல்ல அமுல்களை நடப்பதினாலும் ஒருவருக்கு கற்றுக்கொடுப்பதினாலு
ம் (௪) வது என்னோமுந்தருது ஓதிக்கொண்டு வருவதினாலும் நல்
லநடத்தைகள் அறிந்து நேத்தியான அமுல்களைச்செய்து கேட்ட்ற
மாக வேணுமெயல்லாமல் பொல்லாஷிரிக்கான காரியங்களைச்செ
ய்திதினுக்குதாரிப்பட்ட காபிரானவர்கள் கியாமத்து நாளையிலே
மெத்தவருத்தமான வேதனைப்பட்டு தவிப்பது போல நாமும் தவி
க்கலாகாது சவால்- கியாமத்து நாளையிலே காபிரானவர்கள் என்ன
த்தினாலே வேதினைப்படுவார்கள் * அல்லாகுத்தாலா உடைய சொ
ல்லையும் அவன் தூதரான முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைஹி
வசல்லமுடைய சொல்லையுங்கேளாமல் தீநக்கு தாரிப்பட்டபடியி
னாலே நரகலோகத்தில் வேதினைப்படுவார்கள்

மஸ்லா

கியாமத்து நாளையிலே அல்லாகுத்தாலா எல்லோரையுங்கண
க்குக்கேழ்விகேழ்க்கும்போது இசுலாமானவர்கள் செய்தபாவத்
துக்குத்தகுந்தாற்போல அசாபைகொடுத்து நன்மைக்குத்தகுந்
து ஸவாபைகொடுத்து எல்லோரையும் நபிசல்லல்லாகு அலைஹிவ
சல்லமுடைய ஷிபாயத்துக்குள்படுத்திசென்னத்தில் தாகல்செ
ய்துக்கொள்ளுவான்

பிறகு காபிரானவர்களை கேள்விக்கேட்டு அவர்கள் ஷிருக்குவைத்
ததுபிரானகாரியமாகபுத்துக்களை வணங்கினபடியினாலே அல்லாகு
த்தஆலாவுபிரானைக்காரியத்தைப்பொறுத்துக்கொள்ளாமல் குற்ற
ம் அவர்கள் பேரிலுமத்தி அந்தபுத்துக்களை அவர்கள்கையிற்றனே
கொடுத்து நரகத்துக்குப் போகச் சொல்வான் அப்பொழுது
காபிரானவர்கள் நரகத்துக்குப்போவார்கள் அந்தநரகத்திலே
மெத்தசக்த்தானவருத்தப்படுவார்கள் அந்தவருத்தத்தைசொல்ல

முடியாது அப்பொழுது அந்தவருத்தம் பொறுக்காமல் காபிரானவர்கள் மிகவுமழுதுக்கொண்டு தங்களிடத்திலிருக்கிறபுத்துக்களுடனே சொல்லிக்கொள்ளுவார்கள் அயபுத்துக்களே துனியாவிலேஇரவும்பகலும் உங்களுடையபூசையைத்தானேசூத்செய்து அல்லாஹுவுடைய ஏவலைமறந்துவிட்டுஅவர்களுக்கிரவுந் தள்ளிவிட்டுநீங்கள் எங்களுக்குஅல்லாவென்று ஒருவேளையாகிலு மறவாமல் உங்களுடைய பூசையைவிடாமல் செய்துக்கொண்டு வந்தோமோ நீங்களிந்தவேளையில் எங்களுக்கு இந்தநெருப்பினுடையஅசாபுக்களே பொறுக்கமுடிப்போகிலையே இந்தபொல்லாத ஆபத்தையெளிதாக்கி யிந்தயிக்கட் டானயிடத்தை விட்டு இன்னமெங்கையாவது எங்களைக்கொண்டுபோய் விடுங்களென்று அழுதழுது சொல்லுவார்கள் அப்போது அல்லாஹுத்தாலாஉடைய உதவிக்கொண்டு அந்தக்கல்லுகள் வாய்திறந்து பேசும் அயகாபரானவர்களே அல்லாவினுடையமுனிவுபெற்ற அடியார்களே அல்லாஹுத்தாலாவுடைய லானத்துக்கு உட்பட்டவர்களே புத்திகெட்டசாகிங்களே துனியாவில் அல்லாஹுத்தாலாதன்னுடைய தூதரான முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமேஉண்டாக்கி குருனையிறக்கி அதிலிருக்கின்ற படிக்கி நல்லநடக்கைகள் நடந்துநேர்வழிபெற்றுக்கொள்ளும்படி சொன்னபடியினுலேஇந்தமுகம்மதுமூஸ்தபாசல்லல்லாகூ அலைகிவசல்லம்தன்திருவாயால்அதீஸ்களையும்சொல்லிதொபுகளையும் உண்டாக்கி அதில்எல்லவருக்கும்தெரியப்படச்சொல்லி அதில்அல்லாஹுத்தஆலாசெய்யச் சொன்னஏவலைச்செய்தால் சொர்க்கலோகம் பெறுவீர்களென்றும் வேண்டாமென்றவிலகலைச்செய்தால்நரகலோகம்பெறுவீர்களென்றும்சொல்லியிருக்கநீங்கள்ஏவலைவிட்டுவிட்டு விலகலாகிய புத்துகளுக்கும் கல்லுக ளுக்கும் பூசைசெய்துக்கொண்டுவந்தால்நரகலோகம் பெறுவீர்களென்று அறிவும்இல்முமுள்ளபெரியோர்களான ஆலிம்கள்உலமாக்கள்சொன்னதும்கேட்டிருந்து உங்களுடையகுபீரானபுத்தியினுலேஅவர்கள்சொன்னதும்கேளாமல் தாங்கள்கல்லாயிருந்ததும் தெரிந்திருந்துஎங்களைபுத்துக்களாக வாய் - கண்மூக்குகாது-கை- கால்இவகளெல்லாம்எங்களுக்கு இருக்கும்படியாய் துளைத்து உற்பத்திசெய்தீர்களே அப்போதாவது நாங்கள்ஏன் எங்களைத் துளைக்கிறீர்கள்ஏன்எங்களைஉற்பத்தி செய்தீர்களென்றுநாங்கள் உங்களைக்கேட்டதுண்டா அல்லது எங்களைஅடுப்பாகவைத்துநெருப்புப்போட்டுஎரித்தீர்களே அப்போதாவது ஏன் எங்களை எரிக்கிறீர்களென்றுகேட்டதுண்டா அல்லது யெங்களைபுத்துகளாகச்செய்து

நாங்கள்உங்களைத்திருத்தச்சொல்லியெங்களைவணங்கும்படிச் சொ
ன்னதுண்டா அல்லது நீங்கள்எங்கள்காலடியில் விழுந்துகும்பிடு
ம்போது நாங்கள்உங்களைநாளைகியாமத்து நாளையிலேநரகவே
தனையைவிட்டு யெழுதாக்கி எங்கையாவது கொண்டுபோரு
மென்று சொன்னதுண்டா இப்படி யிருக்கநீங்கள்நரகவாதிகளா
வதுமல்லாமல் எங்களையும்நரகத்தில் வேவைத்தீர்களே அல்லா
குத்தாலா எங்களைகல்லுகளாகஉண்டாக்கி துனியாவிலனுப்பியி
ருந்தானேஇப்போ நீங்கள்புத்தகுராத்தாக உண்டாககினீர்களே
நாங்கள்இந்த குராத்தைக்கொண்டு அல்லாகுத்தஆலாவுக்கு முன்
னே நாங்கள்போகஎங்களுக்கு வெழ்க்கமாயிருக்குதே உங்களை
அல்லாகுத்த ஆலாஎங்களை தான்கல்லுகளாக உண்டாக்கி யிருக்க
உங்களுக்கு இந்தகுராத்துயேதென்று கேட்டால்நாங்களென்னத்
தைச் சொல்லுவோம் ஆகையால் உங்களையிட்டு நாங்கள்பின்னே
யுமொருதரம் நெருப்பிலேவெந்துஉருகி கல்லாகவேகவேண்டி
யதாக இருக்குதேஇப்படிக்கி உங்களையிட்டு எங்களுக்கிந்தகார
ணம்வந்து யிருக்க பின்னையு மெங்களைத்தானே பிடித்துக்கொ
ண்டுஅழுதால் நாங்களென்னச்செய்வோம் எங்களுடைய விதி
உங்களுக்குநீங்கள் துனியாவில்பற்றிக் கெட்டகாரியஞ்செய்தத
ற்கு நீங்கள்நன்றாகச்செருப்படிப்படுங்கள் அல்லாகுத்தஆலாஉ
டைய லானத்துக்குள்பட்டு காயமாய் இந்தநரகத்தில் தானே
இருங்களென்று புத்துக்கள்சொல்லும் அப்போதுகாபிரானவர்
கள் இந்தபுத்துகளுள் சொன்னஉத்திரவு கேட்டவுடனே அவர்க
ள்மனந்திடுக்கிட்டு மிகவும்பயந்துநடுநடுங்கிஅவதைரியப்பட்டு
அந்தட்சணமே தங்கள் தங்கள் கையிலிருக்கிறபுத்துக்களைநரகத்
திற்றுனேகோவமாய்ப்போட்டுவிட்டுகாபருனவர்கள் மிகுதியா
ய்ப்பயந்து மிச்சமாய்கோவென்றழுதுக் கொண்டு அல்லாகுத்
த ஆலாவிடத்தில்மறுபடியுந்திரும்பி வருவார்கள்அப்போது வ
ந்துச்சொல்லுவார்கள் யாஅல்லாகுத்தஆலாவே நாங்கள்கெட்ட
புத்தியினாலே துனியாவில் நீயனுப்பியகுருணிலிருக்கின்றதுபோ
லஉன்னுடைய நபிநாயகம்சொன்னசொல்லையும் ஆலீம்கள்உல
மாக்கள் பீர்மார்கள்முதலாகிய அறிவாளர்கள் இவர்கள்எங்களுக்
குச் சொன்னசொல்லையும் தட்டிவிட்டுஎங்களுடைய மதகெர்வ
த்தினாலே புத்துக்களைவணங்கி வீணுகநாள்களைப் போக்கடித்து
காபிர்களாகயிருந்து மவுத்தானபிறகு இவ்விடத்தில்வந்து இந்த
நரகநெருப்பில் வெந்ததின்பின் அசாபுகள்தெரிந்ததுஎங்களைப்
போலத்தானே அந்தப்புத்துக்களுமழுகுது இவ்விடத்தில் அசாபு
ள்ளபேர்கள் அல்லாறசூலுடையகிருபையைக்கொண்டுகடேற்ற

மாகவேணுமேயல்லாமல் இங்கேஇந்தஆபத்தான வேளையிலே பிள்ளையாருடைய ஒத்தாசையுமில்லைஆகையினாலேஎங்களுக்கு மிகுதியானபயமாயிருக்குது.

யாறப்பில்ஆலமீனே இன்னமொருதிறம்எங்களைத்துனியாவில் அனுப்பிவைப்பானேயானால் நாங்கள்போய் யிசுலாத்திலாயி உன்னுடையறசூல்சொன்னசொற்படிக்கிநடந்துஆகாதகாரியங்களை தள்ளிவிட்டு நல்லஅமல்களைச்செய்து இசுலாமென்று பேரெடுத்துக்கொண்டுவருகிறோமென்றுசொல்லுவார்கள் அப்போது அல்லாகுத்தஆலாசொல்லுவான் அய்யாகாபிரானவர்களேஎன்னத்துக்கு நீங்கள்வீணுக்கு என்னிடத்தில்வந்து அழுகின்றீர்கள் நானுங்களை துனியாவிலனுப்பியிருக்கும்போதே தேடிக்கொள்ளாமல் இப்போ யிந்த பொல்லாங்காகிய அசாபை பொறுக்கமாட்டாமல்இன்னமொருதிரம் துனியாவிலேவிடு நாங்கள்போய் வணங்குகிறோ மென்று சொன்னால் விடுவேனென்று மனதில் எண்ணங்கொண் டிருந்தீர்களே ஆனால் நீங்கள்வாழும்படியானஇடம் நரகலோகமே யொழியமற்றவை யில்லையென்று அல்லாசுப ஆனந்தஆலா உத்தாரங்கொடுத்துஅந்தக்காபர்களைநரகலோகத்துக்குஅனுப்பிவிடுவான்

அப்பொழுதுகாபரானவர்கள் மிகவுங்கூக்குரலிட்டுஅழுதுக்கொண்டுஎல்லோரும் நரகலோகம்போய்ச்சேருவார்கள் அப்போதுநரகலோகம்போய்ச்சேர்ந்த காபருனவர்களுக்கு மனதுசந்தோஷமாயிருக்கும் ஏனெனல்நாம்பள் துனியாவிலிருக்கும்போது இல்லாதவருத்தமும்சங்கடமும் இப்படிப்போற்கொத்த வேதனையிலகப்பட்டுக்கொண்டு இருக்கச்சே நம்மைமவுத்துவந்து பிரித்துவிட்டதேஅப்படி இந்தப்பொல்லாங்காகிய நரகவேதனையைவிட்டு மவுத்தாகிப்போவோமென்றுசந்தோஷமடைவார்கள்.

சுவர்க்கலோகத்திலுண்டான இசுலாமானபேர்கள் மனதில் மிகவுந்துக்கமாகிய துயரப்படுவார்கள் ஏனெனல்நாம்பள் துனியாவில்பணஞ்சம்பாதித்து வீடுவாசல்மாடமாளிகைகூடகோபுரம்முதலாகிய பெண்சாதிபிள்ளைகள் இப்படிப்போற்கொத்த இன்பத்தி லிருக்கும்வேளையில் நம்மைமவுத்துவந்து பிரித்துவிட்டதே அப்படிப்போல இப்போஇந்தசுவர்க்கத்திலுண்டான நற்பதவியையும் இராகத்தையும் இன்பத்தையும் நலத்தையும் உண்பனையையும் உடுப்பையையும் அவைகளெல்லாம் விட்டுநம்மைப்பிரியும்படி மவுத்துவந்து எங்கைப்பிரித்துவிடுகிறதோவென்று மனதில்மிகவும்விசனமடைவார்கள்.

அப்போது அல்லாசுப ஆனந்தஆலாமலக்கையேவுவான் அந்தமலக்கானவர் சுவர்க்கத்துக்கும்நரகத்துக்கும்நடுவேபூமிவெடித்து வெளியேபுறப்படுவார்கள் அந்தஇரண்டுமலக்கில் ஒருமலக்குடையகையில் சூரியும்ஒருமலக்குடைய கையில் கறுத்த ஆட்டுக்கிடாவும் பிடித்துக்கொண்டுவருவார்கள் இந்தஇரண்டுமலக்குகளும் அங்கேவந்துநின்றுசுவர்க்கத்திலுண்டானபேர்களே நீங்களுமென்னைத் திரும்பிப்பாருங்கள் நரகலோகத்தி லுண்டானபேர்களே நீங்களுமென்னைத் திரும்பிப்பாருங்களென்று கூப்பிடுவார்கள் அப்போதுஇரண்டு கூட்டத்தாரும் திரும்பிப்பார்ப்பார்கள் அப்போதுஇந்தஇரண்டுமலக்குஞ்' சொல்லுவார்கள் உங்களைதுனியாவிலே சந்தோஷமாகவும்துக்கமாகவுமிருந்தீர்களே அப்போது உங்களை துனியாவைவிட்டு வேறாகப் பிரித்துக்கொண்டுவந்தது இதோநான்கையிற் பிடித்திருக்கப்பட்ட ஆட்டுக்கிடாவானது உங்களையுமவுத்தாக்கினது இப்போது அந்தமவுத்தைமவுத்தாக்கிவிடுகிறேன் இனிவுங்களை மவுத்துவந்துபிடிக்காதென்று அந்தஆட்டுக்கிடாயே தூக்கிக்கீழேபோட்டு சுபாச்செய்துவிடுவார்கள் அப்போதுநரகத்திலுண்டான வர்களுக்குதுக்கமும்துயரமும்பெற்று இருப்பார்கள் சுவர்க்கத்திலுண்டான மூமினானபேர்கள் இன்பமும் இராகத்தும்பெற்றுஅல்லா சுபஆனுத்த ஆலாவினுடைய திதாரும்முகம்மது நபிசல்லல்லாகூ அலைகிவசல்லமுடைய ஷபாஅத்தோடுவாழ்ந்துக்கொண்டுஇருப்பார்கள்

ஆமீன்-ஆமீன்-யாறப்பில்-ஆலமீன்

கிபாயத்துல்யிசுலாம்.

முற்றிற்று.